ஆணும் பெண்ணும் நிகரென...

பெண் சமத்துவக் கல்வி பாடல்கள்



சமம்

சமம்

பாடல்கள்

● ஆறு கவிஞர்கள்

○ ஒன்பது கவிதைகள்

● பாடாமல் விடியாது...

○ *புதுகை வெற்றி நிலவன்*

(தொகையறா)

பெண்ணின் பிறப்பை பூமிக்கு பாரமென
காட்டி வைப்பதா......
மின்னல் கொடியே உனை ஜன்னல் கம்பிக்குள்
பூட்டி வைப்பதா......

(பல்லவி)

நீ பாடாமல் விடியாது பெண்ணே
நீ பாடாமல் விடியாது பெண்ணே
பூபாளராகம் பாடு
புதிதாக மண்ணில் விதைபோடு (நீ பாடாமல்)

சர 1. பெண்பிள்ளை என்றாலே கருவும் சிதையுது
பெற்றோரின் மனம்கூட கனமாகிப்போகுது
கருக்கொள்ளும்போதே உருக்கொள்ளும் தளிரை
ஞாலத்தின் அழகாகப் பெறுவோம்-வரும்
காலத்தின் மடிமீது தருவோம்.........(நீ பாடாமல்)

சர 2. பண்பாடு என்றாலே பெண்தானா இலக்கு
ஆணுக்கு இதுபோன்ற நிலைஎன்ன இருக்கு
கல்விக்கண் கொண்டு இருள்மீண்டு வந்து
பார்வைக்கு அர்த்தங்கள் தருவாய்-உந்தன்
பாதைக்கு ஒளிதன்னைப் பெறுவாய்... (நீ பாடாமல்)

சர 3. ஒருகண்ணில் மைதீட்டும் அழகென்ன அழகோ
உனையன்றி உருவாகும் வரலாறும் உளதோ
நீயாக தீயாக மாறிவரும்வரை
தீராது துயரம் பெண்ணே-விதி
மாற்றாமல் மாறாது பெண்ணே .. (நீ பாடாமல்)

● பெண்ணே உன் வாழ்க்கையிலே

○ இ. மு. வெற்றி வளவன்

(தொகையறா)

பெண்ணென்றால் பேயிரங்கும்
என்றதய்யா ஊரு
பெண்ணை ஒரு மனுசியென்று
ஏற்றவர்கள் யாரு
காவியங்கள் நூறுகண்டு
களிப்படைந்த நாடு
உள்ளபடி பெண்ணை இங்கு
உரைத்ததுண்டோ கூறு

(பல்லவி)

பெண்ணே உன் வாழ்க்கையிலே
இருக்குதொரு வழக்கு
வருகின்ற நாட்களில்-நீ
தீர்க்க வேண்டிய கணக்கு.
கல்லாமை இருளிலே
தள்ளாடுவது ஏனம்மா?
அறிவொளியின் தீபம் கண்டு
விடியுமுந்தன் வாழ்வம்மா.

(அனுபல்லவி)

தகப்பனுக்குக் கஞ்சிக் கலயம்
தூக்கி நடந்தியே-எருச்
சாணி பொறுக்க நாருப் பெட்டி
சுமக்கத் துணிஞ்சியே
அரிவாளோடு கருவக் காட்டில்
அலைந்து திரிஞ்சியே-தினம்
கல்லு மண்ணு சுமக்கப் பிரம்புக்
கூடை எடுத்தியே.

இளங்குருத்தில் எத்தனையோ
பொறுப்பைச் சுமந்தியே-ஒரு
ஏடெடுத்துப் படிக்க மட்டும்
மறந்து போனியே

(பெண்ணே...)

பச்செப் பயிரை பறிச்சபோது
பாதி உசுருதான்-நீ
நட்டபிறகு வந்ததம்மா
மீதி உசுரெல்லாம்
கருவமரத்துத் தொட்டிலிலே
கண்கள் இருந்ததே
கைவிரலில் கண் முளைச்சு
களை எடுத்ததே
காட்டு வேலை வீட்டு வேலை
களச்சதில்லையே-ஒரு
கடுதாசி வந்தபோது
மலச்சு நின்னியே!

(பெண்ணே...)

● கர்ப்பத்தின் குரல்

○ *வையம்பட்டி முத்துசாமி*

ஆண் : பொண்ணு பொறக்குமா ஆணு பொறக்குமா
பத்துமாசமா போராட்டம்-இதுவும்
பொண்ணா பொறந்தா கொன்னுடுவேன்னு
புருஷன் பண்ணுறான் ஆர்ப்பாட்டம்

கண்ணீர் வடிக்கிறா செத்துப் பிழைக்குறா
நித்தம் கோயில கூட்டித் தொடைக்கிறா
மொட்டையடிக்கிறேன் காணிக்கை தாறேன்னு
ஏழுமலையானை வேண்டி தவிக்கிறா

(பொண்ணு)

பெண் : அருமை மாமி உறுமுறாள்
அம்மி குளவியால் அடிக்கிறாள்
ஆகாசத்துக்கும் பூமிக்கும்-அவ
எகிறி நின்னு குதிக்கிறாள்
நாத்தி பழிக்குறா ஏத்தி இறைக்குறா
பரம்பரையை வம்பிக்கிழுக்கிறா
ஆத்திரம் கோவமாய் வருது-அவை
அத்தனையும் கண்ணீர் விழுது

(பொண்ணு)

ஆண் : மனசில் இருந்த பாரம்-மண்ணில்
இறங்கி வந்த நேரம்-பொம்பளபுள்ளனு
இடியோசை கேட்டா காதோரம்
கனவுகள் தூளாச்சு கடவுளும் பொய்யாச்சு
மனசோ தவுலாச்சு, வாழ்க்கையோ இருளாச்சு

(பொண்ணு)



ஆ : என்ன பண்ணப் போறானோ
ஏது செய்யப் போறானோ
எண்ணாத எண்ணமெல்லாம்-எண்ணி
எடுத்தா ஒரு முடிவு-பெண்ணை
வளர்த்து எடுத்து தலைமுறையை காக்கும் ஒரு தெளிவு

பெ : குழந்தையை கொன்னுபுட்டா கொடுமை தீருமா
கொடுமைக்கு கொள்ளி வைக்க கொதித்தெழ
வேண்டாமா

எதிர்காலம் மாறுமா இப்படியே போகுமா
குழந்தையை வாழவிடு வாழ்ந்திட போராடு.

● நீயும் இறங்கிப் போராடு

○ *இ.மு. வெற்றி வளவன்*

மஞ்சள் குங்குமம் கொண்டாட
மல்லிகைச் சந்தனம் செண்டாட
வளையல் குலுங்க நகையும் அணிந்து
வந்தாப் பொண்ணுன்னு பேரோட

(மஞ்சள்)

பாதியிலே படிப்பை நிறுத்திப் பவுடர் பூசுவதும்
உடம்பு வளரும் முன்பே அவ பிள்ளை பெறுவதும்
காலத்துக்கும் குடும்பத்திலே அடங்கி வாழுறதும்
முப்பது வயது முடியுமுன்னே கிழவியாகுறதும்

கட்டாய வாழ்க்கையிலே
பொண்ணுங்க அழியக் கூடாது
எப்போதும் பிறரை நம்பி
வாழ விரும்பலாகாது

(மஞ்சள்)

வெத்திலை பாக்கு தட்டு எடுத்து பருசம் போடுவான்
வெவரமில்லா ஒருத்தன் அவளைக் கூடி வாழுவான்
காலமெல்லாம் தறுதலையா தெருவில் ஆடுவான்
வாழவந்த பொண்ணு உடம்பில் கற்பை தேடுவான்

கழுத்துல மூணு முடிச்சு
விழுந்து விட்டா அடிமையா
அப்படித்தான் வாழணுமின்னு
எழுதினவன் யாரடி?

(மஞ்சள்)

நாளுக்கு நாள் உலகம் மாறும் கணக்குத் தப்பாது
நாகரீகம் வளர்ந்திடுமா பெண்கள் இல்லாது
அடக்கு முறையும் அடிமைத் தனமும் உலகில் இல்லாது
ஆக்கிடுமோ ஆண்மை இங்கே பெண்மை இல்லாது

(மஞ்சள்)

அழுகிப் போன பழத்திலையும் விதையிருக்குதடி
அணைஞ்சு போன அடுப்பிலையும் அன்லடிக்குதடி
பழகிப் போன வாழ்க்கையின்னு பழச நம்பாதே
விலகிப் போயி ஒதுங்கி நின்னு புதுசத் தள்ளாதே

நிமிர்ந்து நடந்துவாடி
புதுமைப் பெண்ணாய் மண்மேலே
கோடான கோடியடி
தொடரும் உந்தன் பின்னாலே

(மஞ்சள்)

● கண்ணென்பார் மணியென்பார்

○ *முகில்*

தானானே தானனன்னே
தானேனன்னே னானனன்னே
தானானே னானனன்னே
தானேனன்னே னானேனன்னே

கண்ணென்பார் மணியென்பார்
கற்கண்டு தேனென்பார்
பொன்னென்பார் பூவென்பார்
பொண்ணே நீ மயங்காதே

(தானானே)

காட்டு வேலை செய்தாலும்
வீட்டு வேலை உன் பொறுப்பு
கண்ணுக்கு தெரியாது
பெண்ணே உன் பெரும் உழைப்பு

கணவன் சொல்லும் வேலைகளை
காலமெல்லாம் செய்யணுமாம்
அதிகார வேதமிது
அடியோடு அடிச்செழுது

வாளெடுத்து போர் தொடுத்த
ஜான்சிராணி மங்கம்மா
பரம்பரைய பாரம்மா
வீரம் உந்தன் வேரம்மா

(தானானே)

ஆணென்ன பெண்ணென்ன
இரண்டு பேரும் சமம் தானே
ஓடும் இந்த வாழ்க்கையிலே
ஒன்று சேர்தல் முறைதானே

(தானானே)

● குட்ட குட்ட குனிஞ்ச முதுகு

○ *பிரளயன்*

(பல்லவி)

குட்ட குட்ட குனிஞ்ச முதுகு
நிமிருதிங்கே பாரு-இப்ப
மாறுதுங்க ஊரு-அதை
மறுப்பது இங்கு யாரு-பெண்கள்
சொந்தக் காலில் நிற்கும் காலம்
வந்ததின்னு பாடு-இப்ப
வந்ததின்னு பாடு.

(குட்ட)

(சரணம்)

அதுக்கும் இதுக்கும் லாயக்கில்லேன்னு
ஒதுக்கி வச்சார் அப்போ-தனியா
விலக்கி வச்சார் அப்போ
கல்லு உடைக்கிறோம் பாறை பிளக்கிறோம்
தொழிலு செய்யுறோம்-இப்போ
ஆளு வக்கிறோம் வேலை வாங்குறோம்
கூலி அளக்கிறோம் இப்போ-தனியா
நிருவாகம் பண்ணுறோம் இப்போ

(குட்ட)

கொடுத்த கூலிய மறுப்பு சொல்லாம
வாங்கி வச்சோம் அப்போ-மடியில்
முடிச்சி வச்சோம் அப்போ
ஆணுக்கு இணையா வேலைகள் செஞ்சு
சம்பளம் வாங்கிறோம் இப்போ
எதையும் தனியா முடிக்கிற
காலம் வந்தது இப்போ-தலை
நிமிர்ந்து நிமிர்ந்து நடக்கிறோம் இப்போ.

(குட்ட)

● விழித்துக் கொண்டே

○ *புதுகை வெற்றி நிலவன்*

விழித்துக் கொண்டே இருக்கணும்டி கண்ணே-புது
விடியலுக்காய் வெளியில் வாடி பெண்ணே ....

முடியாது பெண்ணாலே என்பாரின் வார்த்தைகளில்
முடங்கி விடலாமோ மொழியே...
விடியாது இவளாலே என்கிற மாயையினை
விழுங்கி விடுவாயோ ஒளியே......
நீ எழுந்து நின்று முடியுமென்று எழுது பேசு-உன்னை
நெருங்குகின்ற கொடுமைகளில் அனலை வீசு......

(விழித்து)

சிறகொடித்து அடிமைசெய்வார் வீட்டுக்குள்ளே
சீறும்புயலாகி நீ வர வெளியே
சிந்தனை மழுங்கடிக்க வழிசொல்வார் நடுவே
சிந்தித்து முடிவெடுப்பாய் தனியே......
நீ எழுந்துநின்று முடியுமென்று எழுது பேசு-உன்னை
நெருங்குகின்ற கொடுமைகளில் அனலை வீசு......

(விழித்து)

பாவம் பாவம் என்றே சுமைகொடுப்பார் உலகில்
பார்த்து நடந்து செல் நதியே
பாதுகாப்பு என்றுசொல்லி கைபிடிப்பார் நாட்டில்
பத்திரமாக இரு அலையே
நீ எழுந்துநின்று முடியுமென்று எழுது பேசு-உன்னை
நெருங்குகின்ற கொடுமைகளில் அனலை வீசு......

(விழித்து)

● நான் குனிஞ்சு நட்ட

○ *புதுகை வெற்றி நிலவன்*

பெண் : நான் குனிஞ்சுதான் நட்ட பயிரத்தான் பாரு
நிமிர்ந்துதான் நிக்குதே மச்சானே-தெம்பா
நட்டு வச்ச நான் நிமிருவதைப்போது
சொல்லுங்க சொல்லுங்க மச்சானே.

வீட்டுல காட்டிலே வேலை செஞ்சு-நான்
வெந்து மடியிறேன் மச்சானே
மாடாக ஓயாமல் நாமும் உழைச்சாலும்
மரியாதை இல்லியே மச்சானே–சொல்லு

சின்னஞ் சிறுசையும் பெருசையும் வளர்க்கிற
மிசினாவே ஆனேனே ஞாயமா-வீட்டில்
மிசினாவே ஆனேனே ஞாயமா
சமயலிலிருந்தே சகலமும் செய்யுறேன்
வேடிக்கை பார்க்கிற ஓரமா- நின்னு
வேடிக்கை பார்க்கிற ஓரமா

ஓசியில் வேலைன்னா எங்கிட்டே வாங்கிறே
ஒடிக்கிற இடுப்பத்தான் ஏனய்யா-ரொம்ப
ஒடிக்கிற இடுப்பத்தான் ஏனய்யா
காசு பணமுன்னு உங்கைய் நீளுது
கஷ்டந்தான் எம்பக்கம் சேருது-அய்யா
கஷ்டந்தான் எம்பக்கம் சேருது

ஆண் : வீட்டு வேலையைச் செய்யக் கூட நீ
கூலியக் கேக்கிற ஞாயமா-புதுசா
கூலியக் கேக்கிற ஞாயமா
வெடிக்கிற கொடுமையா கேள்வியும் இருக்குது
காரணம் என்னன்னு சொல்லம்மா-சொல்லு
காரணம் என்னன்னு சொல்லம்மா

பெண் : கொடுமை ஒன்னுமில்லை கோளாறுமில்லை
கூலிய நானும் கேக்கல்ல
பாதியா வேலைய பிரிச்சுக்கணும்-என்
பாரத்தை பாதியா தாங்கிக்கணும்.........

ஆண் : பட்டுன்னு சொல்லிய உன் கருத்துல
ஞாயம் இருக்குது ராசாத்தி-நல்ல
ஞாயம் இருக்குது ராசாத்தி
உன் பாரத்தில் பாதியை நானுமே தாங்குறேன்
பயப்பட வேணாமே ராசாத்தி-நான்
பக்குவமாயிட்டேன் ராசாத்தி

புதுமைப் பெண்

பாரதியார்

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்குமாம்

பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம் ;
நாணும் அச்சமும் நாய்கட்கு வேணுமாம் ;

ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்;
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டிரோ!

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்;

(ஆணும்)

அமிழ்ந்து பேரிருளாம் அறியாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி உரைப்பது கேட்டிரோ!

(ஆணும்)

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்,
ஓது பற்பல நூல்வகை கற்கவும்,
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார்நங்கள் பாரா
தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்;
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பாராம்.

சமம்

7 லஸ் சர்ச் சாலை
மயிலாப்பூர்
சென்னை 600 004

விலை : ரூ. 2.00